# DISTRICT INSTITUTE OF EDUCATION AND TRAINING - NAMAKKAL

# PLAY WITH SCIENCE-WORKSHOP

# DOCUMENTATION







# மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

## நாமக்கல் – 637 001

## கோடைக்காலத் தன்னார்வ ஆசிரியர் திறன்வளர் பயிற்சி

## "அறிவியலோடு விளையாடு – பணிமனை"

**ஆக்கத் தலைமை** : முனைவர் மு. செல்வம்
முதல்வர், DIET நாமக்கல்.

**திட்ட ச்செயலர்** : திரு. ஏ. சிவபெருமான்,
விரிவுரையாளர், DIET, நாமக்கல்

**திட்டக் குழு உறுப்பினர்கள்** : அனைத்து கல்வியாளர்கள்,
DIET, நாமக்கல் .

**அன்பளிப்பு** : ரோட்டரி சங்கம் இராசிபுரம்.

**நாள்** : 30.4.2024

# கோடைக்கால தன்னார்வ ஆசிரியர் திறன்வளர் பயிற்சி

# "அறிவியலோடு விளையாடு – பணிமனை"

**வாழ்த்துரை :**

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் இராசிபுரம் ரோட்டரி சங்கம் இணைந்து இப்பணிமனையை ஒருங்கிணைத்து செயல்படுத்தியது. நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து கல்வி ஒன்றியங்களில் இருந்தும், பயிற்சி பெற வருகைப் புரிந்த 48 ஆசிரியர்களுக்கு ரோட்டரி சங்கம் நிதி உதவி அளித்து இப்பணிமனைச் சிறப்பாக நடைபெற உதவியது. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கல்வி ஒன்றியங்களிலிருந்து கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் நன்கு செயல்படக்கூடிய ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு இப்பயிற்சி அவர்களுக்கு வழங்கப்பட்டது. இப்பணிமனைக்குக் கருத்தாளராக " அறிவியலின் சிறகுகள் " Wings of Science சேலம், நிறுவனர் திரு. அரவிந்த் கண்ணன் அவர்கள் கருத்தாளராக அழைக்கப்பட்டார், அவர் அறிவியல் செய்முறைப் பயிற்சியினைச் சிறப்பாக ஆசிரியர்களுக்கு வழங்கினார். அறிவியலோடு விளையாடு பணிமனையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இப்பயிற்சியினை வரும் ஜூன் மாதத்தில் ஒவ்வொரு பள்ளிக்கும் எடுத்துச் சென்று அவரவர் வகுப்பறைகளில் செயலாக்கம் செய்யப்பட உள்ளனர். இத்திட்டத்தினைச் செயலாக்கம் செய்த திட்ட செயலர் திரு. ஏ. சிவபெருமான், விரிவுரையாளர் , DIET, நாமக்கல் , அவர்களையும் , திட்ட குழு உறுப்பினர்களான அனைத்துக் கல்வியாளர்களையும் வாழ்த்துகிறேன். அறிவியல் உபகரணப்பெட்டி ( Science kit box ) , உணவு , நிகழ்ச்சி நடைபெற இடம் ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கிய ரோட்டரி சங்கத்தினர்களை வாழ்த்துகிறேன். இது போன்ற பயனுள்ள பயிற்சிகளை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வருங்காலத்தில் வழங்கிட வாழ்த்துகிறேன்.

## நோக்கம் :

- ஆசிரியர்களிடையே அறிவியல் மனப்பான்மை, அறிவியல் செய்முறைகள் சார்ந்த விழிப்புணர்வினை வளர்த்தல்.
- ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள செய்முறைப் பயிற்சிகளின் உபகரணங்களை அறிவியல் பெட்டகமாக தயார் செய்தல்.
- ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலுள்ள செய்முறைப் பயிற்சிகளைச் செய்து காட்டி செயல்விளக்கம் அளித்தல்.
- ஆசிரியர்களிடையே செய்முறைப்பயிற்சிகளைச் செய்து பார்க்கும் திறனை வளர்த்தல்.
- ராக்கெட் ஏவுதல் நிகழ்வை நேரடியாக கண்டுணரச் செய்து நேரடி அனுபவத்தை ஆசிரியர்களுக்கு வழங்குதல்.
- அறிவியல் உபகரணப் பெட்டகத்தைச் ( Science kit box ) கொண்டு செய்முறைப் பயிற்சிகளை மேற்கொண்ட ஆசிரியர்களின் செய்முறைத்திறனை மாணவர்களுக்கு பயனடையச் செய்தல்.

## செயல்படுத்திய விதம் :

ஆசிரியர்கள் கோடைக்காலத்தினைப் பயனுள்ள வகையில் செலவிடுவதற்கு ஆசிரியர்களுக்குக் கோடைக்காலத் தன்னார்வ திறன் வளர் பயிற்சி கொடுக்க DIET, நாமக்கல்லால் முடிவு செய்யப்பட்டது. நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும், ரோட்டரி கிளப் ஆஃப் இராசிபுரமும் இணைந்து கோடைக்காலத் தன்னார்வ ஆசிரியர் திறன்வளர் பயிற்சியை 30.4.2024 அன்று இராசிபுரம் ரோட்டரி ஹாலில் நடத்தின. இப்பயிற்சி நாமக்கல் மாவட்ட ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பணிமனைப் பயிற்சியினை நேரடியாக வழங்கலாம் என்று திட்டமிடப்பட்டது. நாமக்கல் மாவட்ட ஆசிரியர்கள் அனைவரும் ஓரிடத்தில் கூடுவதற்கு ஏதுவாக இராசிபுரம் ரோட்டரி அலுவலக வளாகம் தேர்வு செய்யப்பட்டது.

அறிவியல் கற்பித்தலின் முதன்மையான நோக்கமே அறிவியல் மனப்பான்மையை மாணவர்களிடையே வளர்த்தலாகும். புதியனப் படைத்தல், உண்மைகள் மீது ஆசை கொள்ளுதல், சான்றுகளுக்கு மரியாதைக் கொடுத்தல், காரணங்காணுதல் மற்றும் மூடநம்பிக்கைகள் மீது வெறுப்புக் கொள்ளுதல் போன்ற பண்புகளே ' அறிவியல் மனப்பான்மை' ஆகும்.

செலவில்லாத பரிசோதனைக்கான மூலப்பொருளாக தண்ணீரை எடுத்துக் கொண்டு, அதன் அடர்த்தி, பரப்பளவு விசை, அழுத்தம், வானவில் உருவாக்குதல், வடிகட்டுதல், விசை, புவியீர்ப்பு மையம், நுண்துளை ஈர்ப்பு விசை, அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளின் கட்டமைப்பு, நீரைக் கொண்டு கார்பன் டை ஆக்ஸைடு உருவாக்குதல், முக்கோண பரிசோதனை, பறக்கும் காகிதத்தட்டு போன்ற பரிசோதனைகளைச் செய்வது குறித்த பயிற்சி 30.4.2024 அன்று இராசிபுரம், ரோட்டரி ஹாலில் நடைபெற்றது. கூடவே, மாயஜால அறிவியல் சோதனைகள் ( Magical Science ) , ராக்கெட் ஏவுதல் நிகழ்வும் நடைப்பெற்றது. இந்நிகழ்விற்கு கருத்தாளராக சேலம், " அறிவியலின் சிறகுகள் " Wings of Science அகாதமியின் அர்விந்த் செயல்பாட்டார்.

பள்ளிகளில் செலவில்லாதத் திட்டங்களை மற்றும் நடைமுறைகளை உருவாக்கும்போது தொடர்ந்து அவைகள் செயல்பாடுகளாக மாறி கற்பித்தலிலும், கற்றலிலும் தொடர்ந்து கற்றல் விளைவுகளை ஏற்படுத்துகின்றன என நாமக்கல் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் அவர்கள் கூறினார்.

மேற்காண் நீர் சார்ந்த பரிசோதனைகளைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் செய்து காட்டவும், மாணவர்களே பரிசோதனைகளைச் செய்து பார்க்கத் தூண்டும் வகையில் பயிற்சியில் பங்குப் பெற்ற 48 ஆசிரியர்களுக்கும் நீர் சார்ந்த பரிசோதனைச் செய்ய உதவும் 30 கருவிகள் அடங்கிய ஆய்வுப் பெட்டகங்களை ரோட்டரி கிளப் ஆஃப் இராசிபுரம் தலைவர் திரு. சீனிவாசன், செயலர் திரு. ஆனந்த குமார், ரோட்டரி மாவட்ட ( 2982) ஆசிரியர் உதவிக்கான தலைவர் திரு. கருணாகர பன்னீர் செல்வம் ஆகியோர் வழங்கினார்கள். இதில் நீர் சார்ந்த 10 பரிசோதனைகள் செய்து காட்டி செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இப்பணிமனையில் கலந்து கொள்ள வந்த அனைத்து ஆசிரியர்களுக்கும்

அறிவியல் ஆய்வு பெட்டகம் இலவசமாக வழங்கப்பட்டது. இந்த அறிவியல் ஆய்வு பெட்டகத்தில் 30 கருவிகள் கொண்ட ஆய்வக உபகரணங்கள் இருந்தன. இந்த பரிசோதனைகள் செய்து பார்த்து ஆசிரியர்கள் நன்கு அறிந்து கொண்டனர். இப்பணிமனை முடித்து சென்று அன்றைய தினமே இப்பணிமனையில் கற்று கொண்ட அறிவியல் செய்முறைப் பயிற்சிகள் அண்மை வீட்டார் (Neighbourhood laboratory ) குழந்தைகளுக்குப் பயிற்சி ஆசிரியர்களால் வழங்கப்பட்டு அச்செய்முறை பயிற்சிகளைப் பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் அவரவர்களே செய்முறைகளைச் செய்து மகிழ்ந்தனர். மேலும் அறிவியலோடு விளையாடு பணிமனையில் கலந்து கொண்ட ஆசிரியர்களின் பிள்ளைகள், அவர்களின் உறவினர்களின் குழந்தைகளிடம் தெருக்களில் கூட கூட்டாக சேர்ந்து இவ்வறிவியல் செய்முறைகளைச் செய்து களித்தனர். இது தெரு ஆய்வகச் சூழலை ( Street Laboratory ) ஏற்படுத்தியது

நாமக்கல் , மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் துணை முதல்வர் அமீருன்னிசா, ஆசிரியர் பாலசரவணன் போன்றோர் வாழ்த்துரை வழங்கினார்கள், இந்நிறுவன விரிவுரையாளர் திரு. ஏ. சிவபெருமான் பயிற்சியின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

இது போன்ற செலவில்லாத கற்பித்தல் –கற்றல் பொருட்களைக் கொண்ட வகுப்பறைச் செயல்பாடுகள் ஆசிரியர்களின் கற்பித்தலில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என இராசிபுரம், பாரதிதாசன் சாலை, நகராட்சி நடுநிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் பாரதி அவர்கள் கூறினார். இப்பணிமனையில் பங்கு பெற்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் வருகைச் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நிறுவன விரிவுரையாளர் திரு. ஏ. சிவபெருமான் நன்றியுரையாற்றினார்.

## பயனாளிகள் :

நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து ஒன்றியங்களிலிருந்து இடைநிலை ஆசிரியர்கள் , பட்டதாரி ஆசிரியர்கள் ஆகிய 48 ஆசிரியர்கள் இப்பணிமனையில் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

## நிதி உதவி :

அறிவியல் உபகரணப்பெட்டி ( Science kit box ) , அனைத்து ஆசிரியர்களுக்கும் உணவு, நிகழ்ச்சி நடைபெற இடம், ஆகிய உதவிகளை இராசிபுரம், ரோட்டரி சங்கம் அளித்து, இப்பணிமனை சிறப்பாக நடைபெற பேருதவி நல்கியது.













